06

முன்னேற்றம்

இயற்றியவர்

K. கலியாணசுந்தரன்,

சிதம்பரம்.

சென்னை

ஷ்வரி அச்சகத்தில்

ச்சிடப்பட்டது.

[விலை 0-3-0

O-,6NKL3,M
N49
113955

மதிப்புரை

—

திருவாளர் K. கலியாணசுந்தரனுர் அவர்கள் எழுதிய "முன்னேற்றம்" என்னும் நூலினை பார்வையிடும் பேறு பெற்றேன். அதில் அறிவுத் திறனும், ஆராய்ச்சித்திறனும், ஒருங்கே அமைந்துள்ளன. இவர், யாவரும் விழையும்படி எழுதும் ஆற்றல் உடையவர்; கற்றறிந்ததற் கேற்றவாறு அடக்கமும், விழுமிய ஒழுக்கமுடையவர்; தளரா ஊக்கத்தோடு சமூகத்தொண்டு செய்துவருகிருர். நம் சமூக மக்களின் நலனுக்காக காலத்திற்கேற்ற முறையில் தம் உள்ளக் கருத்தை எழுதி தொண்டாற்றிவரும் இவ்வாசிரியர் அவர்களுக்கு என் வாழ்த்து உரியதாகுக.

K. பொன்னுசாமி நாட்டார்,

(11-5-49.) சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

"முன்னேற்றம்"

——(o)——

சாதி கூடாது

"சாதி கூடாது—ஆகாது"
"பிரிவினை பொல்லாதது, இனி செல்லாதது!"
"பிளவு, பேதம் பேசுவது பேதைமை"
"வேற்றுமை வற்றிவிட்டது,
ஒற்றுமை ஊற்றெடுத் தோடுகிறது!"

அறிஞர்கள் சொல்கிறார்கள். அரசியல் வாதிகள் மேடையேறி முழங்குகிறார்கள். சீர்திருத்த வாதிகள் உரத்த குரலில் ஓங்காரக் கூச்சலிடுகிறார்கள். எழுத்தாளர்கள் தணல் நடையில் எழுதித்தள்ளுகிறார்கள்; கவிவாணர்கள் சுடச்சுட கவிதை பொழிகிறார்கள். நாளும் நாம் கேட்கிறோம்; படிக்கிறோம்; நம்மில் பலரும் அவ்விதமே எண்ணுகிறோம்.

"சாதி இரண்டொழிய வேறில்லை"
"ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்"
"சாதிமத பேதமெல்லாம் பித்துப்பிள்ளை
விளையாட்டு"
நால்வகைச் சாதியை நாட்டினில் நாட்டினீர்.
"ஆயிரம் உண்டிங்கு சாதி"
"எல்லோரும் ஓரினம், எல்லோரும் ஓர் நிறை,
எல்லாரும் இந்நாட்டு மக்கள்."
"காக்கை குருவி எங்கள் ஜாதி"
"சாதிகள் இல்லையடி பாப்பா" [ரூல்
"வாழ்கின்றார் முப்பத்துமுக்கோடி மக்கள் என்
சூழ்கின்ற பேதமும் அந்தத் தொகை இருக்கும்
ஆண்டவன் படைப்பில் அனைவரும் ஒன்றே"
"மக்கள் நிகர்"
"பிறவியில் பேதம் பேசுவது அறமா?"

"மாமரத்தில் தாவுகின்ற மல்லிகையே [யே?"
பாமரர்கள் சொல்லுகின்ற சாதி உனக்கில்லே

இப்படி சாட்சிக்கு இழுக்கிருர்கள் பல பொன்னெழுத்துக் கோர்வைகளை! ஔவையை, இராமலிங்கரை, பாரதியாரை கல்லறையிலிருந்துத் தட்டியெழுப்பி அழைத்துவருகிருர்கள். அவர்களும் தயங்காது சாட்சி கூறுகிருர்கள்.

'பீவர்லி நிக்காலஸ்' என்ற வெள்ளையன் கேலி செய்கிருன் இந்தியாவில் 3000 சாதிகள் என்று. 'ஸ்டோரி'ன் எகத்தாளமான புள்ளி விவரம் கிளை சாதிகளையும் சேர்த்தால் 19000! என்று 'ஹோவல்ஸ்' கிண்டல்செய்கிருன் புள்ளி விவரத்தால் திட்டவட்டமாக 2378 சாதிகள் என்று. இப்படி அந்நியரை அழைத்து, அவர்களது கேலிப் புன்னகையைக் காட்டி, கிண்டல் வார்த்தைகளை எடுத்துச் சொல்லி நம்மை அவர்கள் பக்கம் இழுக்கப் பார்க்கிருர்கள். அவர்களின் வாதத்தை ஒப்புக்கொள்ள முயற்சிசெய்கிருர்கள். நாம் அவர்களைப் பாராட்டுவோம்; வாயார வாழ்த்துக்கூறுவோம்; இன்னும் சற்று வெளிப்படையாகக் கூறிஞல் அவர்களை வழுத்துவோம்; துதிசெய்வோம்; ஏன்? நாம் அவர்களது வார்த்தைகளை முழுக்க முழுக்க ஆமோதிக்கிரும்!

ஆஞல் . . . . . !

இங்கு, நமது பொன் கொழிக்கும் தாய் நாட்டில் —செந்தமிழ் நாட்டில் சாதிகள் ஏராளமாக இருக்கின்றன. அதஞல் ஒற்றுமை குறைகிறது, குறைவதென்ன? மறைந்தேவிட்டது! அதோடு நில்லாமல் அதற்கு எதிரிடையாக வேற்றுமை வளர்கிறது. ஆம், இது உண்மைதான்.

ஆகவே, சாதியென்பது ஒரு பாம்புப்புற்று. அதனை இடித்து நொறுக்கித் தரை மட்டமாக்கவேண்டும் என்பதை உணர்கிரும். ஆஞல் . . . .? என்று ஒரு பெருமூச்சு நம்மையறியாமல் வருகிறது! ஏன்?

நாளை அரசாங்கத்தார் ஒரு சட்டம் இயற்றுகிறார்கள்—சாதிபேதம் தூக்கிலிடப்பட்டுவிட்டது என்று! சமுதாயத்தின் சரிந்த நிலையைச் சரிசெய்துவிடுமா அந்தச் சட்டம்? முடியாது என்பதுமட்டுமல்ல: இருக்கும் பாழ்நிலையை இரட்டிப்பாக்கும். உயர்ந்த சாதி உயர்ந்துகொண்டே போகவும், தாழ்ந்த வகுப்பு தாழ்ந்து தாழ்ந்து ஆழக்குழியில் புதைக்கப்படவுமே வழிபிறக்கும்.

"மக்கள் நிகர்" என்ற எழுத்துக்கோர்வை எழுத்தளவிலேயே, பேச்சளவோடுமட்டும் நிறுத்திவிடாமல், செயலளவில் முடித்து விதியமைத்தால் அதுவே விவேகிகளால் வரம்வற்கப்படும். எதனையும் செய்யாமல் திடீரென ஒரு தலைகீழ் மாற்றமான விதியைப் புகுத்துவது அறியாமை. வீணரும் பழித்துப்பேசுவர். ஆகவே, மக்களிலே இன்று ஏற்பட்டுள்ள சாதிக்கூறுகளை ஒன்றுக்குவதற்குமுன், தனித்தனியே சிதறிக்கிடக்கிற நிலையிலேயே வளரவும், ஒன்றைப்போல மற்றொன்று எல்லாத் துறைகளிலும் சிறப்படையவும் முயன்று முடித்தல்வேண்டும். அதற்கு அரசியலார் துணைசெய்யவேண்டும்.

சிதைந்துபோன சிற்பம்போல இன்று தமிழர் இனம் காட்சியளிக்கிறது. அது சீர்பெறவேண்டும் என்றால், தமிழர் இடத்தில் இடம்பெற்றுள்ள ஒவ்வொரு உயிரும் உழைக்கத் தயாராகவேண்டும். அப்படி உழைத்து உயர்வடைவதால் இனம் இன்பநிலை எய்தும்.

ஒரு சில இனமக்கள்மட்டும் இன்றைய சமுதாயத்தில் எல்லாத் துறைகளிலும் சிறந்து விளங்குகிறார்கள் என்பதை மறுக்கமுடியாது. அவர்களது நிலையை மற்ற சாதிகள் எட்டிப்பிடிக்கிற அளவுக்கு உயரவேண்டும். இல்லையேல், மக்கள் நிகர் என்பது வெட்டிப் பேச்சு. கையில் ஊமையன்கண்ட செய்தி! எனவேதான், சாதிவேண்டாம் என்பது தித்திக்கும்

திட்டமானாலும், உண்ணும் பொருளைச் சுவைப்பதற்கு முன்வாயைத் தூய்மைப்படுத்த நீர்விட்டுக்கொப்பளிப்பதுபோலவும், நாக்கை வழித்துக் கொள்வதுபோலவும் திட்டத்தை ஏற்றுநடத்தும் மக்களைத் தயார் செய்யவேண்டும். அதற்குள்ள வழிதான் அந்தந்த சாதிஉயர சாதிக் கழகங்கள் அமைத்தலாகும். அப்படி அமைப்பதால் பிளவு அதிகரிக்காது. பிளவு மாள வழிபிறக்கும். சமுதாயத்தில் ஏற்பட்டுள்ள பிளவு மறையவே சாதிக் கழகங்கள் வேலைசெய்கின்றன—வேலை செய்யவேண்டும்.

பர்வதராச குலம்!

இழுந்த கோட்டை, பாழடைந்த மண்டபம், அழிந்துபட்ட அரண்மனை, சிதைந்துபோன சிலை, தூர்ந்துபோன அகழ், மண்மேடான மன்னர் அரியாசனம் . . . . இவைகளைப்போலவே பார்க்கப் பரிதாபகரமான புதைபொருள். தோண்டியெடுக்கப் படவேண்டிய பொருள். மலைபோல வாழ்ந்து மடுவுபோலத் தாழ்ந்துவிட்ட மனிதகுலம். பரம்பரை பரம்பரையாகக் கொந்தளிக்கும் கடலில் அயல்நாடுகளுடன் வியாபாரம்செய்து தாய் நாட்டிலே பொற்குவியலை குவித்த நம் வீரர் பரம்பரையின் பாசறைக்கூடம். பொன்னொடு வந்து கறியொடு பெயரும் கலங்களை நடத்திவந்த யவனர்கள் முதல் முதல்கண்டு வாணிபம் நடத்திய வணிக சந்ததியினரின் சந்திக்கும் இடம். இலங்கையிலே, பாரசீகத்திலே, ரோமிலே தமிழன் குரலை எதிரொலிக்கச்செய்த திறமை மிக்க மாலுமிகளின் இணைப்புச் சங்கிலி. தித்திக்கும் தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட மக்கள். தாங்கள் வாழும் பூமியை ஐந்து கூறுக்கிச் சிறப்புற்றோங்கிய மக்கள் கூட்டத்தின் கூடாரம் . . . .!

ஆம்! உங்கள் சமூகம், தமிழரிலே ஐந்தில் ஒரு பங்குள்ளவர்கள். அவர்களின் நிலை இன்று நினைத்தால்

நெஞ்சு பொறுக்குதில்லையே! அப்படியே நிலைகெட்டுக் கிடக்கிறார்கள். அவர்களின் தாழ்ந்த நிலைமையை அளக்கும் 'தர்மாமீடர்' இல்லை.

புராணம்

பர்வதராச குலம் ஒரு அழகான வார்த்தைக் கூட்டம்! அது ஒரு ஆழக்கடல்! நீண்ட சுரங்கம்! அதற்குள் சென்றால் ஆச்சரியம் நம்மை வந்துபற்றும். ஆதியில் அம்மை பார்வதியின் தவறிய செயலைக் கண்டு, பூவுலகில் அவதரிக்கச் சபிக்கிறாராம் அம்மையப்பர். பிறகு சினந்தணிந்து தானேவந்து மணப்பதாக மற்றொரு மாற்றுமருந்தும் சொல்லியருளினாராம். உமையம்மை பர்வத ராசனின், நமக்குப் புரிந்த தமிழில் கூறினால் மலையரசனின் மகளாக, அவதரித்தாளாம். பிறகு மணப்பருவம் எய்தினளாம். ஈசன் தனது திருவிளையாடலை நடத்த எண்ணி நந்தியை அழைத்து திமிங்கலமாகக் கடலிலே சென்று கலாம் விளைக்கச்சொன்னாராம்.

மலையரசன் இதைக்கண்டு வெகுண்டு திமிங்கலத்தை அடக்குபவனுக்குத் தன் மகளை மணம்முடிப்பதாகப் பறை அறைவித்தானாம். சிவகாமிநேசன் செம்படகராானாராம்—ஆமாம் செம்பால்ஆன படகில் ஏறிச்சென்றாராம். திமிங்கலத்தை அடக்கினாராம். மலையரசன் மகளாம் பார்வதியை மறுபடியும் மணந்தாராம். அவர்களுக்குப் புத்திரர்கள் பிறந்து அவர்கள் பரம்பரையில் வந்தவர்களாம் நீங்கள் . . . . . கதை எப்படியாவது இருக்கட்டும். கதைக்குக் காலேது? ஈசன் பரம்பரையினர் நாம் கதையில்! நீசனின் நிலைமையைவிட மோசமான, நாசமான தன்மையிலே உலக நடவடிக்கையிலே இருக்கலாமா? இது தகுமா? முறையா? சிந்தியுங்கள்.

தஞ்சையரசர் வீட்டுப் பெண்ணணங்கு ஆற்றிலே அடித்துக்கொண்டு போனளாம். நம்மவர்

காப்பாற்றினுர்களாம். அதற்காக மணியக்காரர் பட்டத்தை மன்னர் மனமுவந்து அளித்தாராம். நம்மில் சிலர் பூசைத் தொழில் புரிந்தனராம், அவர்கள் எல்லாம் பூசாரிகளாம். சில இடங்களில் தேவராக இருக்கிருேம் காரணம் தெரியவில்லே. சில இடங்களில் பிள்ளேயாகி விட்டோம்.

நமக்கொரு நல்ல பெயர்

ஆனுல், இவையெல்லாம் சிந்தித்துப் பார்த்தால் நமக்கு என்ன தோன்றுகிறது? தமிழகத்திலே பிறந்த நாம் தமிழ்ப் பெயரிழந்து, அதிலேயும் பல பிரிவுகளாய்ப் பிரிந்து, நாடெங்கும் சிதறிவிட்டோம். நாட்டின் ஐந்தில் ஒரு பாகத்தைச் சொந்த நிலமாகக் கொண்ட நமக்கு நிலேயான பெயர் இல்லேயா? நேர்மையான நாமம்வேண்டாமா? அநாமதேயப் பேர்வழிகளா நாம்? ஆர அமரயோசியுங்கள் ஆத்திரப்படாமல்! பர்வதராச குலம்—இதில் மருந்துக்கும் தமிழ் உண்டா? தமிழினத்திலே பிறந்து, தமிழ் மொழியிலே குளிர்மொழி பேசி, தமிழ் நிலத்திலே தவழ்ந்து, தமிழே மூச்சு, தமிழே உயிர், தமிழே வாழ்வு, தமிழே எல்லாம் என்ற உணர்வுடன் இருந்த நாம், அந்நிய மொழியால், அதுவும் பொருள்புரியாத மொழியால் அழைக்கப்பட வேண்டுமா? நமக்கென ஒரு நல்ல பெயரில்லேயென்ருலும் இதனே ஏற்கலாம். அப்படியுமில்லேயே!

மணியக்காரர், பூசாரி, பிள்ளே, பக்தர், தேவர் ஆகிய பெயர்களிலே ஒன்றை எடுத்துக்கொள்ளலாம் என்ருலோ தொட்டால் துவளும்—சொற்கள், விட்டால் துகள் துகளாகும் பெயர்கள்—ஏனெனில், காரணமில்லாத, அதுவும் உண்மையான விளக்கமில்லாத பெயர்கள் எப்படி நிலேத்து நிற்கமுடியும்? நீடித்துத்தான் வருமா?

நாட்டார்

நமக்கென்ற பெயர், அழகான பெயர், அருமையான பெயர், அர்த்தமுள்ள பெயர், ஒன்று உண்டு. அதுதான் நாட்டார் என்பதாகும். நாட்டார் என்பது ஏன் பொருத்தமானது என்ற கேள்வி எழலாம். நாட்டின் ஆறு அரண்களில் தலைசிறந்த அரண் கடல்—பகைவர்களிடமிருந்து நாட்டைக் காப்பதும் அதுதான். நாட்டைப் பிடிப்பதும் அதுதான்! ஆகவே, கடல் வலிமையுடையவர்களுக்குத் தான் நாடு உரிமையாக்கப்படும்.

இங்கிலாந்து மடலரசி என்று அழைக்கப்படுகிறது இன்றும். சென்ற முதலாம் உலகப்போரில் கடல் வலிமையினுல்தானே வெற்றியும் கிட்டியது வெள்ளையருக்கு. ஞாயிறு மறையாத ஞாலத்தைப் பெற்றுவிட்டோம் என்று பெருமை பேசுகிற அளவுக்கு வெற்றிகிடைத்தது. இங்கிலாந்து இன்னும் இடிந்து நொறுங்காமல் இருப்பதற்குக் காரணம் கடல் வலிமைதான் என்று அழுத்தந்திருத்தமாகக் கூறலாம்.

எலிசபெத் இராணி காலத்தில் டிரேக், ஹாக்கின்ஸ் இருந்தார்கள். அந்தக் கடல் வல்லுநர்களின் துணையினுல் தான் வெல்லமுடியாத ஸ்பெயின் ஆர்மேடாவை வென்ருர்கள். ஆம்! தமிழ் நாட்டின் டிரேக், ஹாக்கின்ஸ் பரம்பரை நாம் தாம்! சென்னைக் கடற்கரையில் காலணு காசை எறிந்தால் மீனைப்போலப் பாய்ந்தெடுக்கும் நம் சிறுவர்களிடம் அந்தப் பழைய பண்பு மறைந்து ஒளிந்திருக்கிறது. ஆகவே, கடல் அரணின் காவலர்கள் நாம். எனவே, நாட்டுக்குடையவர் நாட்டார்!

நாட்டார், தமிழ் நாட்டில் மானத்தைக் கடலிலும் விட்டுவிடாமல் காத்தார்!

நாட்டார் தமிழ்க் கூட்டத்தார்
நாட்டார் கடல் மணல்போல் இன்று
சரிந்துவிட்டார்

எனினும் மீட்டுவார் என்ற நம்பிக்கையுடன் மீண்டும் வெற்றிக்கொடி நாட்டிவிட்டார்.

நாட்டார் தீமைகள் அனைத்தையும் விட்டார், இழிவு துடைக்க எண்ணமில்லாதவருடன் ஒட்டார், நாட்டின்பாழ் நிலைகளில் எட்டார், தம் சமூகம் வாழப் பிறரின் இதயப் புண்ணைத்தட்டார். பொறுமைக் கண்ணும் காட்டார், திட்டும் நாக்கையும் நீட்டார், பிறரைமட்டும் குற்றம் சாட்டார், உழைப்புண்டு, நாம்உண்டு என்ற இருதயப்பட்டார், உழைக்காமல் பிறரைமட்டும் உறிஞ்சி ஊதிவிடலாம்என்று எண்ண மாட்டார்.

நாம் நாட்டார். அந்த நல்ல பெயரை நமக்கே உரிய சொந்தப் பெயரை விட்டுவிடுவாரும் உண்டோ? கருத்துள்ள பெயர். பிறர் கருத்தையும் கவரும் பெயர். அதுமட்டுமல்ல, தமிழ்ப் பெயர் நாட்டார் அதனைவிடுத்து அந்நியர் மொழியில் கடன்வாங்கி, அதற்கென ஒரு கதையமைத்து ஆயாசப்படுவானேன்? நாட்டார் நமக்குரிய பெயர்—நீங்கள் ஏற்க வேண்டும். ஆனால், நீங்கள் சிந்தித்தபின் தீரமாக ஒப்புக்கொண்ட பிறகு.

நாட்டார் நலஉரிமைக் கழகம்

நாட்டார் சமூகம் நலிந்துவிட்டது. இது வெளிப்படை உள்ளங்கைப் புண்போல்! நலிந்த நிலையை நலமாக்க நாட்டார் நலஉரிமைக் கழகங்கள் வேண்டும். ஓரளவு அம்முயற்சியில் ஈடுபட்டுள்ளோம். ஆனால், முழுவெற்றி கிடைக்கவில்லை. எவ்வளவு உயர்ந்தநிலை சமுதாயத்தில் இருந்தாலும் திருப்தியடையாமல் 'பிராமண சேவா சங்கம்' நிறுவிவிட்டார்கள் பிரா

பணர்கள். 'அந்தணர்' பத்திரிகை மூலம் அக்னியாஸ்திரம் விடுகிறார்கள்! நாடார்களுக்கென கல்லூரி கட்டுகிற அளவிற்கு உயர்ந்துவிட்டனர் நாடார்கள். உயர உயரப்பறக்கக் கற்றுக்கொண்டனர் தாழ்த்தப்பட்டோர். ஆனால், நாம் . . . . ஏதோ இருக்கிறோம்.

எனவே, நாட்டார் நலவுரிமைக் கழகங்கள் நாடெங்கும் நகரெங்கும் நாட்டுங்கள். நாட்டார் வீடுகளில் முன்னேற்றம் என்ற வார்த்தை ஒலிக்கட்டும். "நாமும் மனிதர்கள். மண்ணன்று; பூச்சல்ல; புன்மைத் தேரையல்ல; புழுவல்ல. மனிதகுலத்திலே ஒரு அங்கத்தினர் என்ற உணர்ச்சி பொங்கட்டும்! "திருப்புமுகம், திறவிழி என்று முழங்கட்டும்". சுடர் முகம் தூக்கு, துள்ளும்தோளை நிமிர்த்து என்ற வீரவுரை முழங்கட்டும்! மீசை முறுக்கிலே ஏற்றி, மனித குலப் பட்டாளத்தைப் பார்த்து மேன்மேல் ஏறட்டும்; முன்னேறட்டும்!

தாழோம், தாழ்த்தோம்

நாட்டார் முதன்முதல் தங்கள் இதய கீதமாக இதய இன்னிசையாகத் தங்கள் சமூகச் சாசனமாகக் கொள்ளவேண்டிய தொண்டு ஒன்றுண்டு. அதுதான் நாட்டார் எவருக்கும் தாழார், எவரையும் தாழ்த்தார் என்ற அடிப்படையான உண்மையாகும், அதுவே தான் தமிழ்க் குலத்தின் சித்தாந்தம். நாம் தாழ்வு மனப்பான்மையைக் கொள்ளக்கூடாது. அது பகுத்தறிவைப் பாழ்செய்யும் பாஷாணம். மனத்திற்கும் உடலுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. மனப்பக்குவப்படித்தான் உடல் அமையும். மனப்பக்குவமோ சூழ்நிலையைப் பொருத்தது! "என்னைப்பார், என் உழைப்பைப்பார், உழைத்து உழைத்து கருத்த உடலைப்பார், உழைக்கும் ஊதியம் கிடைக்காததால் வருந்தும் வாடிய கண்களைப்பார், ஒட்டிய வயிற்றைப்பார், எண்ணியெடுக்கக்கூடிய எலும்பைப்பார், ஆனல், என்

தோளிலே ஏறிச்சவாறி செய்கிருனே மேற்குலத்தான அவனது வாடாத மேனியைக் குனியாது, நிமிராது உண்டு கொழுத்துள்ள தொந்தியைப்பார்" என்று ஆத்திரப் பேச்சை அள்ளி வீசுவதுமட்டும் விவேகமல்ல. "இதோ இருக்கிருனே பஞ்சை வயலிலும் வரப்பிலும், வெயிலென்றும் மழையென்றும் பாராமல் பாடுபடுகின்ருனே இவன் தாழ்ந்தவனும்! உழைக்காதவன் உயர்ந்தவனும்!" என்றும் எண்ணுவதுதான் அறிவுடைமை. இந்த எண்ணம் கருவுயிர்க்கும் ஒரு வண்ணக்குழவி. அதுதான் எவருக்கும் தாழோம், எவரையும் தாழ்த்தோம்.

கல்வி நீரோடை

ஒரு சரிந்த சமூகம்—விலா எலும்பு நொறுங்கிய மக்கட்கூட்டம்—முன்னேற வேண்டுமாயின், கல்வி வேண்டும். ஆராய்ச்சித் திறன்வேண்டும். இவைகளில் அடங்கியிருக்கிறது சமூக முன்னேற்றம் என்பது எள்ளுக்குள் இருக்கும் எண்ணெயைப்போல. முன்னேற்றம் ஒரு எட்டாத மாடியானுல் கல்வி அங்கு ஏறிச்செல்லும் மாடிப்படி. முன்னேற்றம் ஒரு கடலானுல் அதில் நீந்திச்செல்ல உதவும் கலம் கல்வி. இவைகளையே நீங்கள் திரும்பத்திரும்ப ஆராயவேண்டும். சமூக முன்னேற்றத்தைச் சொல்லவந்த நான் ஏன் கல்வியை முதலில் சொல்லவேண்டும் என்பதை?

நாட்டாரிடையே கருகிவிட்ட, புகைந்துவிட்ட அந்தக் கல்வியை மீண்டும் பெறவேண்டும். ஏன்? எவ்வாறு என்பதைப்பற்றிப் பலப்பல மேடைகளில் பேசிவிட்டோம். மக்களுக்குப் புரியும்படி எடுத்துச் சொல்லிவிட்டோம். கல்வியைப் பற்றிப் பல ஏடுகள் படித்துக் காண்பித்துவிட்டோம். நெருப்பால், வெள்ளத்தால், அழிக்க முடியாது—கள்வரால் கவரப்படமாட்டாது-என்று பெருமைகளைச் சொல்லியாகிவிட்டது. 'கல்வியே கருந்தனம்' என்று ஆசைமூட்டி

விட்டாயிற்று. "கல்வியே கண்—இன்றிடின் புண்" என்று இடித்துக் காட்டியாகிவிட்டது. "விலங்கொடு மக்கள் அனையார்........கல்லாதார்" என்று தடித்தத் தோலரும் துடித்தெழும்படி அடித்தடித்துச்சொல்லி யாய்விட்டது. இன்னமும் உறங்குகிறோம். நம் சமூக மக்கள் சிந்திக்கவேண்டும். ஆண்டுக்கொரு முறை ஏடுகளை தூசிதட்டி ஐப்பான் சூடதீபம் காட்டுவ தோடு நிறுத்திக் கொள்ளக்கூடாது.

கல்வி நீரோடை வற்றாத ஜீவநதி. அதிலிருந்து பலப்பல கிளை நதிகள் கிளம்பலாம். இந்த இடத்தில் சற்று அமைதியாக ஆராயவேண்டும். இந்திய உப கண்டம் இப்போதுதான் அடிமைத் தளைகளை அறுத் துக்கொண்டு உரிமைக் கூடாரத்தில் நுழைந்திருக் கிறது. உரிமை வாழ்வில் ஏணைப்பருவம். நம் இளம் இந்தியக் குடியாட்சிக்கு இரு திங்களுக்கு முன்னால் தான் 'ஜலஉஷா' விடப்பட்டது. ஆனால், ஆயிரக் கணக்கான ஜலஉஷாக்களை அடக்கியாண்ட பரம்பரை யினர் நாம். நமக்கு இன்று கலைபயில வசதியில்லை. தொழில் கற்க இடமில்லை. உயர்நிலைப் பள்ளிகளும், கலைக்கழகங்களும் தொழிற்கூடங்களும் ஏராளமாக ஏற்படுகிற நேரத்தில் நாம் வேடிக்கைப் பார்க்கலாமா? நம் சமூகத்திடையே மறைந்துகிடக்கும் திறமை— அதுதான் அடங்காத அலையையும் எவர் கட்டளைக்கும் பணியாத சுழற்காற்றையும் ஆட்டிப்படைக்கும் பாலுமி வலிமை—கப்பலோட்டும் கைத்திறமை பயன் படுத்தப்படவேண்டும். அந்த ஒளிந்திருக்கும் திற மையைத் தூண்டிவிடவேண்டும். அதற்கேற்ற கல்வி முறைகள் கையாளப் படவேண்டும். நாட்டாரை மட்டும் கேட்கவில்லை—நாட்டோரையும் தான்—நாட் டையாளும் கூட்டத்தாரையும் தான்.

அருமையான தொழில்

நாமும் உழவர்கள் தாம். அவர்கள் நிலத்தைப் பண்படுத்துகிறார்கள்; உழுகிறார்கள்; விதைக்கிறார்

கள்; களையெடுக்கிறார்கள்; அறுக்கிறார்கள்; குவிக்கிறார்கள்; மகிழ்கிறார்கள். நாமுந்தான் என்ன? அவர்களும் நாமும் ஒன்றுதான். கடல், ஆறு, குளம் இவைகள் விசித்திரமான நிலங்கள், அதுதான் நமக்கு வயல். அங்கு பண்படுத்த—உழவுஉழ-விதை விதைக்க களையெடுக்கவேண்டிய அவசியம்இல்லை. ஆனால், அறுவடை நமக்கு உண்டு. ஆனால், உழவர்களுக்கு உயிர்ப் பயமில்லை. நாமோ நாளும் நாளும் ஆபத்தோடேயே விளையாடுகிறோம். எப்படி உழுதொழில் இன்று கேவலமாகக் கருதப்படுகிறதோ அப்படியே மீன் பிடிப்பும் கேவலமாகக் கருதப்படுகிறது. தொழிலில் சிறுமை பெருமை கற்பிப்பது கயமை. கையாலாகாதவரின் நாவன்மை.

மேலை நாடுகளில் இதற்கு நேர்மாறான நிலைமையைக் காண்கிறோம். தூண்டிலால் அண்டத்தை ஆளும் வன்மைபெற்ற இங்கிலாந்து. மீன் வலையால் மேன்மையுற்றது ஸ்வீடன். கடல்மீது கலத்தையோட்டி சயிற்றை வீசி மீனைப்பிடித்தாலும் உலக நாடுகளிலே ஒன்று என்று பேசும் பெருமைபெற்றது நார்வே. ஆனால் எல்லாத் துறையிலும் பழமைப்பாசி தொன்மைத்தரு ஏறியிருப்பதுபோலவே இந்தத் தொழிலிலும் பண்டைய முறைகள் அண்டியிருக்கின்றன. விஞ்ஞான முறைகளின் மூலம் இந்தத் தொழிலை உன்னதமான பொருளை அள்ளிவிதைக்கும் லாபகரமான தொழிலாக மாற்றமுடியும். அங்கே மீன்பிடிக்கும் நிலையங்கள் அமைத்துள்ளதுபோலவும் மீன் எண்ணெய்கள் எடுக்கும் தொழிற்சாலைகள் போலவும் ஏன் ஏற்படுத்தக்கூடாது? ஆனால், எல்லோரும் அந்தத் தொழில்தான் செய்யவேண்டுமென்பதும் தவறு. அறிவின் போக்குப்படித்தான் ஒருவன் செய்யும் தொழிலும் அமையும். அப்படி அமைந்தால் தான் அந்தத் தொழிலும் வளம்பெறும்.

மருந்துக்கும் ஓர் ஆள்

நாம் ஏறத்தாழ 60 லட்சம் பேர்கள் இருக்கிறோம். அரசியலில் இதுவரை ஒதுக்கப்பட்டவர்களாகவே விளக்கப்பட்டவர்களாகவே-வாழ்கிறோம். ஏன் இந்த நிலைமை? சட்ட சபை உறுப்பினர்களிலே ஒரு நாட்டார் உண்டா? மந்திரி குழுக்குள்ளே ஒரு நாட்டார் உண்டா? இல்லையே! மருந்துக்கும் ஓர் ஆள் இல்லையே. நம்மைவிடக்குறைந்த எண்ணிக்கை உள்ள சமூகங்களுக்குப் பெரும்பங்கு அளிக்கப்பட்டுள்ளதே! அதுவும் கொடுத்ததுபோதாது என்று குமுறிஎழுந்து மாநாடுகள் கூட்டி வெளியீடுகள் வெளியிட்டுத் தங்கள் எதிர்ப்பைக் காண்பித்தனரே! நாம் மட்டும் உறங்குகிறோமே! இது தருமமா? முறையா? தருமந் தானா?

10 லட்சம் பேர்களுக்கு ஒருவர் என்றமுறையில் அமைத்த 'அரசியல் நிர்ணய சபை'யிலே நம்மில் எத்தனைபேர் இடம்பெற்றார்கள். ஒருவர்கூட அங்கத்தினர் ஆகவில்லையே. இதனை அவர்கள் ஏமாற்றினார்கள் என்பதா? நாம் ஏமாந்துவிட்டோம் என்பதா? சிந்தியுங்கள். அரசியலில் பங்கு பெறுதவரை நாம் அழமுடியாதே தவிர—தொழுது சொல்லமுடியுமே தவிர—சட்ட ஏட்டிலே எழுது இதனையென்ற அதட்டும் குரலில் பேசமுடியுமா? உரிமையைக் கேட்பது பிறப்புரிமை—கேட்க மறுப்பது அடிமை மனப்பான்மை—கேட்கவேண்டும் என்ற எண்ணம் இருந்தும் பயந்து இருப்பது கோழமை? அழிக்கப் படுமோ என்று விட்டுவிடுவது வஞ்சனை—உரிமை உண்டு என்பதையே தெரிந்துகொள்ளாமையே யிருப்பது பேதைமை. தெரிந்தும் தெரியாதுபோல் நடிப்பது கயமை. உரிமையை உள்ளபடி உணர்ந்து அதற்காகப் போராடவும் துணிந்துவருவது வீரம் மட்டுமல்ல அறிவுடைமையாகும்.

வழுக்கு நிலம்

சமுதாயம் ஒரு சருக்குமேடை. அதில் ஏறிச் செல்வது என்பது பெருந்தொல்லை. ஆனால், அத் தொல்லையை ஏற்றுத்தான் சீர்திருத்த வீரர்கள் ஒரு சமுதாயத்தைச் செப்பனிட முடியும். நம் சமூக வாழ்க்கைத் துறையிலே அறியாமையால் அணைக்கப் பட்டு மூடப்பழக்கங்களால் பிணைக்கப்பட்டு அறியாமை வழியும் வழக்கங்களால் இணைக்கப்பட்டு கணத்திற்குக் கணம் சாகிறது—செத்துக்கொண்டே இருக்கிறது.

ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளாக வந்தது—பரம்பரை பரம்பரையாகப் பாட்டன்மார்கள் செய்தது என்று பேசி கொஞ்சமும் பகுத்தறிவிற்கு ஒட்டாத செயல்களைச் செய்வது உண்மையிலேயே நமது சமூகத்தை சவக்குழிக்கு அழைத்துச்செல்ல சாவுமணியடிக்கிறோம் என்றுதான் அர்த்தம். அறிவு மலராத அந்தக் காலத்திய சடங்குகளுக்கும் மடமையான நடவடிக்கைகளுக்கும் அடிமைப் பட்டுக்கொண்டு மற்றத் துறைகளில் மட்டும் முன்னேறவேண்டும் என்று பேசுவது பகற்கனவு தான்.

அரசு சுற்றுவது, அம்மிமிதிப்பது, கழுகைப் பார்த்துக் கன்னத்தில் அடித்துக்கொள்ளுதல். பல்லியைக்கண்டு பயப்படுதல் . . . . இவைகளை மட்டும் கைவிடாமல் அணுக்குண்டு சகாப்தத்தில் முன்னேறுவது என்பது எப்படிமுடியும்?

உள்ளே செல்லரிக்கையில் வெளியில்மட்டும் வண்ணப்பூச்சு இருக்கமுடியுமா? உள்ளே அழுகும் பழம் வெளியிலேமட்டும் எப்படி ருசிக்கமுடியும்? வாழ்க்கைத் துறையிலே இடிந்து கொண்டேயிருக்கிற சமூகம் எப்படி அரசியலிலே பொருளாதாரத் துறையிலே முன்னேற முடியும்? ஒரு கணம் சிந்தியுங்கள்.

துள்ளும் இளைஞரே

இளைஞர்கள் தான் ஒரு சமுதாயத்தின் ஈட்டி முனை என்பர் அறிஞர். ஆம் நாட்டார்குல இளைஞர்கள் முன்வரவேண்டும், வீரமுழக்கம் செய்யவேண்டும்.

பணக்காரர்கள் பகலில் பணத்தை எண்ணிவைக்கவும், இரவில் பணப்பெட்டியடியில் அதனைக் காத்துக்கொண்டு விழித்துக் கிடக்கவுமே தங்கள் வாழ்க்கையைச் செலவிடுகின்றனர். வயதானவர்களோ தடித்ததோலர்கள்—பழமையில் ஊறி உப்பி உள்ளவர்கள். மற்ற வாணிபம், அரசியல் அலுவகங்களில் வேலை பார்ப்பவரோ தங்கள் வயிற்றைக் கழுவத் தான் நேரம் வைத்திருக்கிறார்கள். ஆனால், இளைஞர்கள் வாலிபர்கள்—மாணவ மணிகள்-துள்ளும் இளம் இரத்தம் உள்ளவர்கள்—துடிக்கும் இதயம் உடையவர்கள் அவர்கள் சிந்தனைச் சிற்பிகள்—எண்ண எழில் சித்திரங்கள். இனத்திற்கு வண்ணந்தீட்டும் சுண்ணக்காரர்கள். ஆகவேதான் அவர்கள் முன்வரவேண்டும்.

நாட்டார்குல வாலிபர்கள் வாழ்வை யிழந்து தாழ்வை மணந்து தவிக்கிறார்கள். தாயைப்பிரிந்து தந்தையை விடுத்து தனத்தையிழந்து கோட்டைக் கொத்தளங்களை நழுவவிட்டுத் தொழிலைமறந்து துடியாய்த் துடிக்கிறார்கள். அந்தத் தவிப்பு — துடிப்பு ஒன்றுசேரவேண்டும். ஒன்றுசேரும். ஒரு நாள் சேர்ந்துவிட்டால்—ஒரு சமுதாயத்தை—மட்டுமல்ல, ஒரு இனத்தை—ஒரு இனத்தைமட்டும் அல்ல—பெரிய கண்டத்தின் மக்களையே—ஏன்! உலகத்தையே உண்டாக்கமுடியும்.

இருண்ட ரோமில் ஒளிவீசிய சாக்ரடீஸின் பக்கம் நின்றதுபோல—மதுக்கோப்பையிலே மக்கள் உழைப்பை ஊற்றிக்குடித்த உலுத்தர்கள்மீது பேனா முனையால் போரிட்ட ரூஸோவிடம் — வால்டையரிடம் நின்றதுபோல—சாய்ந்த சைனாவை நேர் நிறுத்

தப் பாடுபட்ட சன்யாட்சனுக்கு உதவிசெய்தது போல—நோயாளி துருக்கியை மாற்றியமைத்த கமால் பாஷாவுக்கு கைக்கொடுத்ததுபோல—இடிந்த இத்தாலியை எழில் பெறச்செய்த கரிபால்டிக் பக்கத் துணைசெய்ததுபோல பொதுவுடைமை மணத்தை வீசச்செய்த லெனின் படையிலே சேர்ந்து பணி யாற்றியதுபோல இளைஞர்களே உமது சமூகத்தைச் செப்பனிடவேண்டும்.

பூட்டிய இரும்பின் கூட்டின் கதவு திறக்கப்பட் டது. சிறுத்தையே வெளியில்வா. உன்னை இகழ்ந்த வர் நடுங்கப் புலியென செயல்செயப் புறப்படு வெளியில்.

——(o)——

Goodland & Co., Printers, Madras I.